ட்டத்தைக் கொண்டு வந்ததும், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்கு போகாமல் இருக்கும் வகையிலே அதை நல்ல முறையிலே கொண்டு வந்திருக்க வேண்டும்; எனவே, நீங்கள் முன்கூட்டியே அதிலே எச்சரிக்கையாக இருக்கவில்லை என்று கேட்பது சரியில்லை. இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று பரிகாரம் பெற உரிமை பெற்றவர்கள் என்பதை அம்மையார் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மக்கள் பாதிக்கப்படும் நிலையிலே இல்லாமல், அந்தச் சட்டத்திலே ஓட்டை உடைசல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். சட்டங்கள் சட்டசபை உறுப்பினர்களுக்கு முன்னால் வருவதில்லை. அந்த ஆர்டினன்ஸ் அறிவிக்கப்பட்டது 14-ஆம் தேதி. எங்களுக்கு 19-ஆம் தேதி தான் வருகிறது. இவ்வளவு கால தாமதம் ஏற்படுகிறது. நான் கூட இரண்டுமுறை பில்ஸ் செக்ஷனிலே வந்து கேட்டுவிட்டுப் போனேன். எங்களுக்கே வரவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் இப்படி காலதாமதம் ஆகிறது என்று தெரியவில்லை. நீதி மன்றத்திற்குப் போவது என்பது வழக்கறிஞர்களுக்கும் கட்சிக்காரர்களுக்குமுள்ள பிரச்னை. இதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நல்லது சொன்னேன், இதை எல்லாம் தவிர்த்திருக்கலாம் என்பதற்காக. கேட்கவில்லை என்றால், அதைப்பற்றிக் கவலையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை கொண்டு வந்ததின் முக்கிய கருத்து, ஐந்து நாட்கள் இதிலே அவகாசம் தரப்படவில்லை என்பதுதான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது "சப் ஜூடிஸ்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "நோ சப் ஜூடிஸ்".

திரு என். கணபதி: மத்திய அரசாங்கம் கொண்டு வந்த பாங்க் நேஷனலைசேஷன் ஆர்டினன்ஸ்ஸை எதிர்த்து ஒரு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு பம்பாயைச் சேர்ந்த ஆர். எஸ். கூப்பர் என்பவர் எடுத்துச் சொல்லுகிறார். அந்த வழக்கு அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது, இந்திய பாராளுமன்றத்திலே அது சட்டமாக நிறைவேறப்பட்டது. அப்பொழுது, இந்திய தலைமை நீதி மன்றம் கருத்துச் சொல்லக் கடமைப்பட்டு, இந்த ஆர்டினன்ஸ் சம்மந்தமாக கோர்ட்டிலே கேசு நடக்கும்பொழுது அதைச் சட்டமாக நிறைவேற்றுவது சட்ட விரோதமில்லை, நீதி மன்ற விதிகளுக்கு புறம்பானதில்லை என்று சொன்னதாக நான் அறிகின்றேன். ஆகவே, அந்த வகையிலே இது சப்-ஜூடிஸ்ஸா அல்லது இதிலே சட்ட சிக்கலோ இருக்காது என்று சொல்லிகொள்கிறேன்.

THIRU M. A. LATHEFF: The question has been raised here that sufficient time must be given to the Members to go into the various provisions of the intended Bill to be introduced so that the Members can get sufficient time to give serious consider ation and to get a proper

knowledge about the Bill that is to be introduced. So far as the Bill is concerned, the question is that an Ordinance that was promulgated; a copy of it was circulated to all Members. I too received a copy of the Ordinance. When that copy of the Ordinace was circulated to all Members, it was given to understand that the Ordinance would be converted into an Act after introducing a Bill in the House and getting it passed. That communication was given to all Members. The question is whether communication was there communicating the decision of Government to convert the Ordinance into a Bill and bring the same to the House or not. I submit that sufficient time was given to all Members. I have received the same copy of the Ordinance, as the intended Bill to be introduced in the House. That fulfilled the necessary rules that govern the introduction of the Bill. That is my submission. The intention of the Government is there. The established convention, Mr. Deputy Speaker, is that as soon as an Ordinance is issued a copy has to be provided to all members and a copy of the Ordinance, i.e., the intended Bill, is to be circulated to all Members. That is the convention. Therefore the necessary formalities have been observed in this matter. There cannot be obvious difficulties for Members because the Members have been given a copy of the Ordinance. The present Bill is the same as Ordinance. Copy has been circulated to members. That is my submission.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sometimes what is found in the Ordinance may not find a place in the Bill. There may be variation of some clauses. So it is not enough if we are provided only with copy of the Ordinance. That is not at all enough. My point is that the present Bill ought to have been circulated before, in time, so that we might come to the House prepared and so t h ae might know what changes had been made from that of the Ordinance.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, I can understand the Hon. Lady Member's contention but that question arises only when the Hon. Minister introduces the Bill and the Hon. Members find any difference between the Ordinance and the Bill . Only then the Hon. Member is entitled to express her grievances.........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இங்கே முதலாவதாக, நீதி மன்றத்தில் ஆர்டினன்ஸ் பொறுத்து வழக்கு இருப்பதுபற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, பல தடவைகளில் நீதி மன்றத்தில் ஆர்டினன்ஸ் குறித்து வழக்கு தொடரப்பட்டு இருந்தும், பாராளுமன்றத்தில் கூட சட்டமுன்வடிவுகள் வந்திருக்கின்றன. ஆக, அது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகாது என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

அடுத்து, ஐந்து நாட்கள் அவகாசம் வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் நம்முடைய மாமன்றத்தில் பல சட்டமுன் வடிவுகளுக்கு 5 நாள் அவசாகம் தேவை என்ற விதியை தளர்த்தி அறி